சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி)

**<u>ம.த.சா.1 நாகராஜ், த/பெ குமரசாமி, வயது.48</u>**

நான் பசிலிக்குட்டை முருகன் கோயிலில் அச்சகராக உள்ளேனா என்றால் தற்காலிக அச்சகராக உள்ளேன். மாதம் மாதம் எனக்கு கோயில் சம்பளம் தருகிறார்களா என்றால் சரிதான். நான் வட்டி தொழிலும் செய்து வருகிறேன் என்றால் தற்போது செய்யவில்லை. 5, 6 வருடங்களுக்கு முன்னர் பாட்னாராக இருந்தபோது செய்துக்கொண்டிருந்தேன். ஓம்முருகா பைனாஸில் யார் யார் பாட்னர் என்றால் (சாட்சியிடம் ஒரு போட்டோ காலண்டரை காட்டி கேள்வி கேட்கப்பட்டது) சாட்சி பாட்னராக இருந்தேன் என்று பதில் அளிக்கிறார். லட்சுமி பைனான்ஸில் சண்முகம் பாட்னராக இல்லை என்றால் சரிதான். எ.ம.த.சா.1ல் சண்முகம் பெயர் இல்லை என்றால் சரிதான். சண்முகம் பாட்னராக இருந்தபோது நான் அதில் பாட்னராக இல்லை. எதிரி சண்முகதிடம் எவ்வளவு பணம் கொடுத்து அதற்கு ஆதராமாக என்ன கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் பாட்னாராக இருந்தபோது காசோலை கொடுக்க வேண்டுமா என்றால் ஆமாம்.

2. நான் பாட்னாராக இருந்தபோது காசோலை கொடுத்தேனா என்றால் கொடுத்து திரும்ப வாங்கிவிட்டேன். பைனான்ஸ் பிரிக்கும்போது அவர் அவர் காசோலைகளை திரும்ப கொடுத்துவிடுவார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. சண்முகம் அதில் பாட்னராக இல்லை என்றாலும் நான் எதிரியிடம் பணம் வாங்கி விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. சண்முகம் எப்படி பழக்கம் என்றால் பழக்கம் கிடையாது அவரை தெரியும் எனக்கும் சண்முகதிற்கும் எந்த விதமான பணபரிமாற்றமும் கிடையாது. எதிரி எனக்கு எதுவும் பணம் கொடுக்க வேண்டுமா என்றால் இல்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவசியம் இல்லை.

Signature of witness.